**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

**<u>O.S. No. 317/2024</u>**

**<u>Witness PW 2</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கேசவேல் | தொழில் | |
| த/பெ | கண்ணப்பன் | வயது | 62 |
| ஊர் | | தேதி | 21.01.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (21.01.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

சாட்சியம் அளிப்பதற்கு என்னை வாதியின் தாயார் என்னை அழைத்தார். நானும் 1வது பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரி. அதனால் எங்களது குடும்பத்தின் விவரம் பொதுவாக எனக்கு தெரியும் என்றால் சரி. 1வது பிரதிவாதிக்கும் மகேஸ்வரி என்பவருக்கும் முதலில் திருமணம் நடைபெற்றது என்றால் சரி. அவர்களுக்கு பிறந்த மகன் தான் பிரசன்னா என்றால் சரி. எனது தம்பிக்கும் மகேஷ்வரிக்கும் இதுவரை சட்டப்படியாக விவாகரத்து நடைபெறவில்லை என்றால் சரி. 1வது பிரதிவாதி வள்ளியம்மாள் உடன் சேர்ந்து வாழ்ந்த போது பிறந்தவர்தான் சுபஸ்ரீ என்றால் சரி. எனக்கும் எனது தம்பி பூபதி மற்றும் 1வது பிரதிவாதி தேவநாதன் ஆகியோர்களுக்கும் இடையே 2008 ம் வருடம் சட்டப்படியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் சரி. அந்த பாக பிரிவினையின் தேவநாதன் என்பவருக்கு சி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரி. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் தேவநாதன் என்பவருக்கு பாக பிரிவினையின் போது ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்கள் என்றால் சரி. 21 செண்ட் நிலத்தை தேவநாதன் என்பவர் பயிர் எதுவும் செய்யவில்லை என்றால் சரி. 2009 ம் வருடம் 1வது பிரதிவாதி கோலியனூரில் சொந்தமாக ஒரு வீட்டுமனை வாங்கினார்

என்றால் சரி. அதனை 2012ம் வருடம் விற்பனை செய்து பொதுகுடும்பத்திற்கு செலவு செய்தார் என்றால் இல்லை வீடு கட்டினார். இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 1வது பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தவறாக விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு பெற்றுள்ள விவரம் பற்றி எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரி. 1வது பிரதிவாதி தற்பொழுது தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் சரி. நான் வள்ளியம்மாள் என்பவர் அழைத்ததால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி தற்பொழுது எந்த வித வருமானம் இல்லாமல் இருந்து வருகிறார் என்றால் சரி.

**<u>2 மற்றும் 3வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னை இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் சுபஸ்ரீ அம்மா மன்றும் சுபஸ்ரீ சொன்னார்கள். நான் சிறிதளவு படிப்பேன். 1வது பிரதிவாதிக்கும் மகேஷ்வரி என்பவருக்கும் தான் சட்டபடியாக திருமணம் நடைபெற்றது என்றால் சரி. அந்த திருமணத்தின் பயனாக 2வது பிரதிவாதி பிறந்துள்ளார் என்றால் சரி. 1வது பிரதிவாதிக்கும் 3 வது பிரதிவாதிக்கும் இடையே சட்டப்படியாக விவாகரத்து நடைபெறவில்லை என்றால் சரி. வள்ளியம்மை மற்றும் 1வது பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் எனக்கு தெரியுமா என்றால் 1வது பிரதிவாதிக்கும் 3 வது பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் பற்றியே எனக்கு தெரியாது 3வது பிரதிவாதி மற்றும்வள்ளியம்மாள் ஆகியோரை 1வது பிரதிவாதி காதல் திருமணம் செய்துகொண்டார். 1வது பிரதிவாதிக்கும் 3 வது பிரதிவாதிக்கும் திருச்சியில் உள்ள சமயபுரம் கோவிலில் இருவீட்டார் சம்மதத்தின் பேரில் திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் திருமணத்திற்கு செல்லவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு அரைகுறையாக தான் தெரியும். வா.சா.1 ல் எனக்கு எந்த இனம் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது. 17.12.2008 ம் தேதி நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரி. கண்ணப்ப கவுண்டர் என்பவர் எனது அப்பாவிற்கு பட்டாவாக கிடைக்கப்பெற்ற நிலம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி ஆனால் வீட்டுமனையை நாங்கள் தான்கிரையம்

வாங்கினோம். எனது அப்பாவின் பேரில் பட்டா இருந்தது என்றால் 21 செண்ட் இடத்திற்கு மட்டும்இருந்தது. அந்த சொத்தானது எனது பாட்டனார் பெயரில் இருந்ததால் அது பூர்வீக சொத்து என்று சொன்னால் சரி. அந்த சொத்தின் பேரில் தான் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 2 மற்றும் 3வது பிரதிவாதியின் அசல் வழக்கு எண். 14/2014 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரி. ஏற்கனவே பாகம் பிரிந்து விட்ட காரணத்தினால் வள்ளியம்மை என்பவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளின் நலனுக்காக வழக்கில் குறிப்பிடப்பட்ட 4வது இன சொத்தினை விற்பனை செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதி கட்டிய வீடு தற்பொழுது இடிந்துவிட்டது என்று சொன்னால் இல்லை வீடு உள்ளது. அங்கு வீடு இல்லை என்றாலும் அது காலி நிலம் என்று சொன்னாலும் சரியல்ல. வள்ளியம்மை மற்றும் தேவநாதன் ஆகியோருக்கு நடைபெற்ற திருமணத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதியானவர் சட்டப்படியாக வள்ளியம்மாள் மற்றும் தேவநாதனுக்கு பிறக்கவில்லை என்றாலும் அதனால் பூர்வீக சொத்தில் பாகம் கோர எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வள்ளியம்மை மற்றும் சுபஸ்ரீ ஆகியோர் தான் குடும்ப விழாவில் கலந்துகொள்வார்கள் மகேஷ்வரி என்பவர் குடும்ப விழாவில் கலந்து கொள்ளமாட்டார். அவ்வாறு எந்த விழாவிலும் கலந்துகொள்ளவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வள்ளியம்மை மற்றும் சுபஸ்ரீ எந்த ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் அவர்கள் வெளியூரில் வசித்து வருகிறார்கள். மடவிலாகம் என்ற கிராமத்தில் வாதி வசித்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.இந்த வழக்கில் நான் கோரியவாறு பரிகாரம் கோர எனக்கு எந்த உரிமையும்இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram